மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 236/2019

**2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 24–ம் நாள் வெள்ளிக் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திருமதி. P.தேன்மொழி, உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகேசன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : ராமசாமி | வட்டம் | : வேப்பந்தட்டை |
| கிராமம் | : வி.களத்தூர் | வயது | : 50/2025 |

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(i) இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து ஏதேனும் அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி கிருஷ்ணமூர்த்தி சொல்லி தான் எனக்கு வழக்கு விபரம் தெரியும் என்றால் சரிதான். வி.களத்தூர் கிராமத்தில் எனக்கு சொந்தமாக விவசாய நிலம் உள்ளதா என்றால் உள்ளது. அதன் சர்வே எண் தெரியுமா என்றால் சரியாக எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண்ணும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கெல்லைகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதி என்னென்ன ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் வாதி கிருஷ்ணமூர்த்தியின் தகப்பனார் நடேசன் இறந்து 40 ஆண்டுகள் மேல் ஆகிறது என்றால் சரிதான். அவர் இறந்தபோது எனக்கு 8 வயது இருக்கும். நடேசன் என்ன வேலை செய்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவர் மிலிட்டரியில் வேலை செய்ததாக ஊரில் சொல்லி கொள்வார்கள்.

(ii) தாவா சொத்திற்கு வடக்கு புறமாக வாதி கிருஷ்ணமூர்த்திக்கு நிலம் உள்ளது என்று சொன்னால் சரிதான். வாதி கிருஷ்ணமூர்த்தி 1ம் பிரதிவாதி சாமிராஜிற்கு பட்டா வழங்கியது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் சொத்து தொடர்பாக சாமிராஜிற்கு எதிராக வழக்கு தொடுத்துள்ளார் என்று மட்டும் தான் தெரியும். சர்வே எண்.89/1 A ஆதியில் ராயமுத்து உடையார்க்கு பாத்தியப்பட்டது என்றால் உடையார்க்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி தெரியும். தாவா சொத்தை கிருஷ்ணமூர்த்தி என்ன அனுபவம் செய்கிறார் என்று எனக்கு தெரியாது என்றால் நான் வேலைக்கு போவேன் விவசாயம் செய்வார்கள் என்று மட்டும் தெரியும். தாவா சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு

வடபுறம் உள்ள இடமும், 1ம் வாதி கிருஷ்ணமூர்த்தியின் மனைவி ராணியின் பெயரில் உள்ள நிலமும் அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

(iii) மேற்படி நிலங்களுக்கு வாதியின் தகப்பனார் நடேசன் ராணுவத்தில் பணி செய்ததால் வழங்கப்பட்ட பட்டா என்று சொன்னால் எனக்கு நேரடியாக தெரியாது. ஊரில் அப்படி சொல்லி கொள்வார்கள். மேற்படி நிலம் சுமார் 5 ஏக்கர் விஸ்தீரணம் இருக்கும் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி பட்டா வேண்டி வருவாய் துறையிடம் அடிக்கடி மனு கொடுப்பார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி கிருஷ்ணமூர்த்தி சொல்லி தான் எனக்கு வழக்கு பற்றி விவரம் தெரியும் என்றாலும் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தை வாதி கிருஷ்ணமூர்த்தி அனுபவித்து வருவதற்கு எனது மூலமாக எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். வழக்கு விவரம் பற்றி தெரியாமலும், வாதி கேட்டுக்கொண்டதற்காக வழக்கிற்காக வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**:இல்லை